DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 09.05.2023

| | |
|---|---|
| Case No. | : CC.84/2022 |
| Deposition of Witness for Prosecution | : PW.1 |
| Name | : வந்தனா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : xxxx |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day of May 2023

(எதிரிகள் ஆஜர் இல்லை. 1 மற்றும் 2ம் எதிரிகளுக்காக 317 கு.வி.மு.ச. பிரிவு படி மனு தாக்கல் செய்யப்பட்டது . எதிரிகளின் அடையாளம் குறித்து வாதம் இல்லை என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கூறியதன் அடிப்படையில் மனு அனுமதிக்கப்பட்டது.)

**<u>முதல் விசாரணை:–</u>**

1) நான் ஏற்காடு லேடீஸ் சீட் ரோட்டில் குடியிருந்து நறுமணப்பொருட்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன் . எதிரிகள் வினோத்குமார் , நித்திஷ், பிரசன்னகுமார் ஆகியோரைத் தெரியும் . எங்கள் கடைக்கு பக்கத்தில் வினோத்குமார் சாக்லேட் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார் . வினோத்குமார் கடைக்கு அடுத்தாற்போல் என் உறவினர் கடை உள்ளது . வழக்கு சம்பவத்திற்கு முன்பே நான் உறவினர் கடைக்கு செல்லும்போது எல்லாம் எதிரி வினோத் என்னை அவமதிக்கும் வகையில் நடந்துக்கொள்வார். வினோத் என்னை விட வயது மூத்தோர் என்பதால் அதை நான் பெரிதாக பொருட்படுத்தவில்லை.

2) கடந்த 27.5.2022 தேதி பிளவர் ஷோக்கு சென்று விட்டு இரவு 9 மணி அளவில் எங்களுக்கு சொந்தமான HONDA WRV காரில் வீட்டிற்கு திரும்பி என் கடையருகே வந்துகொண்டிருந்தபோது , எதிரி வினோத் எங்கள் கடைக்கும் , அவருடைய கடைக்குமிடையே இருசக்கர வாகனத்தை நிறுத்தியிருந்தார் . நாங்கள் எங்கள் காரை நிறுத்திவிட்டு நான் , என் கணவர் பிரேம்திப்சிங் , தம்பி திரேன் , அண்ணன் சந்தோஷ் மற்றும் என்னுடைய 3 வயது குழந்தை ஆகியோர் நடந்து வந்துகொண்டிருந்தபோது என்னுடைய தம்பி திரேன் காலின் மீது எதிரி வினோத் இருசக்கர வாகனத்தின் சக்கரத்தை ஏற்றினார். நாங்கள் ஏன் என்று கேட்டபோது , 1ம் எதிரி வினோத்குமார் போன் செய்து அவருடைய மகன் நித்திஷ் மற்றும் அவருடைய உறவினர் பிரசன்னக்குமார் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்து என் கணவரை கையால் மாறி மாறி அடித்தனர்.

3) நான் தடுக்கச்சென்றபோது நித்திஷ் குமார் என்னை தள்ளிவிட்டு என்னையும், என் கணவர் பிரேம்திப்சிங்கை கட்டையால் நித்திஷ் மற்றும் பிரசன்னகுமார் அடித்தார்கள். 1ம் எதிரி வினோத்குமார் என்னை ஆபாசமாக கெட்ட வார்த்தையால் பேசினார்கள் . (சாட்சி என்ன கெட்டவார்த்தை என்று சொல்ல மறுத்துவிட்டார்.) பின்பு மீண்டும் கேட்டபோது தேவடியா என்று திட்டியதாக சாட்சி கூறுகிறார். 2ம் எதிரி நித்திஷ் –ம் தேவடியா என்ற வார்த்தையை சொல்லி என்னை திட்டினார். சம்பவ இடம் ஒரு சரிவான சாலை. அந்த இடத்தில் என் கணவரை நித்திஷ் தள்ளிவிட்டார். பிரசன்னகுமார் கல் மற்றும் கட்டையால் என் கணவரை அடித்தார் . பின்பு கூர்மையான பொருளை வைத்து என் கணவரின் வயிற்றில் குத்திவிட்டார் . அவை சாவியா அல்லது வேறு பொருளா என்று தெரியவில்லை . என் கணவருக்கு வயிற்றில் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. தலை மற்றும் முதுகிலும் என் கணவருக்கு காயம் இருந்தது . தடுக்க சென்ற என் அண்ணன் சந்தோஷையும் கட்டையால் பிரசன்னக்குமார் அடித்தார் . என் அண்ணன் சந்தோஷிற்கு அதிகமாக காயம் ஏற்படவில்லை. எனக்கும், என் கணவருக்கும் காயம் ஏற்பட்டது.

4) நான் என் குழந்தையை கையில் வைத்துக்கொண்டிருந்தபோது எதிரி வினோத் கல்லால் அடித்ததில் என் முதுகில் காயம் ஏற்பட்டது . நித்திஷ்–ம் கல்லைக் கொண்டு எறிந்தார் , அது எனது கால் அருகே விழுந்தது . ஆனால் காயம் ஏற்படவில்லை. நான் அன்று நடந்த சம்பவத்தின் முழுமையான தகவல்களைத்தான் கூறுகிறேன். முதல் தகவலறிக்கையில் நடந்த சம்பவத்தை சொன்னேன் . தற்போது முழுமையான தகவலைக் கூறுகிறேன் . பின்பு காவல் நிலையத்தில் புகார் அளிப்பதற்காக எங்கள் காரில் ஏறி கடையருகே வந்தபோது , நித்திஷ் மற்றும் பிரசன்னக்குமார் கல்லைக்கொண்டு காரின் முன்பக்க கண்ணாடியை அடித்தனர் . நாங்கள் அங்கிருந்து கிளம்பி காவல்நிலையத்திற்கு வந்துவிட்டோம் . உடைக்கப்பட்ட கார் கண்ணாடியின் மதிப்பு ரூ .15,000/– இருக்கும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . எனக்கு தமிழ் சரியாக எழுத வராது என்பதால் எனது மாமியார் புகாரினை எழுதினார் . நான் அதை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

<u>**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**</u>

Take down by me in the open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him to be correct.

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.